DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.33/2024

PW - 2

| | | |
|---|---|---|
| Name | : | கோபிநாத் (Lw - 2) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Cast | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------25

**(எதிரி ஆஜர்)**

எதிரி தரப்பில் கு.வி.மு.ச. பிரிவு **311**ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை **Date : 07.03.2026**

எனக்கும் எனது மனைவிக்கும் எத்தனை வருடங்களுக்கு முன்னர் திருமணம் நடந்தது என்றால் சுமார் 8 வருடம் இருக்கும். எனக்கும் எனது மனைவிக்கும் குழந்தை இல்லாததால் அடிக்கடி சண்டை வந்தது என்றால் சரியல்ல. எனக்கு மதுபழக்கம் உள்ளதா என்றால் மூன்று வருடங்களுக்கு முன்பு நிறுத்திவிட்டேன் தற்போது இல்லை. நான் போலிசார் விசாரணையில் எதிரி என்னை தடியால் அடித்துவிட்டதாக கூறிவிட்டு தற்போது அதற்கு முறணாக நீதிமன்றதில் எதிரி என்னை இரும்பு பைப்பால் அடித்ததாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

மேற்படி சம்பவத்தின் போது நான் சம்பவ இடத்தில் இருந்த குமார் என்பவரை குமார் இருந்ததாக நான் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் குமார் இருந்தாரா என்றால் இருந்தார். அவரால் தான் சண்டை வந்தது.

இவ்வழக்கில் சம்பவ இடத்தில் இருந்த யாரையும் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் மதுபோதையில் எனது மனைவியின் வீட்டிற்கு சென்று எனது மனைவியை அழைத்தபோது ஏற்பட்ட தள்ளுமுள்ளில் நான் கீழே இருந்த சாக்கடையில் விழுந்து எனது தலையில் ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரி மீது பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையில் எதிரி என்னை தகாத வார்த்தைகளால் திட்டி என்னை அடித்து காயத்தை ஏற்படுத்தி கொலைமிரட்டல் விடுத்திருந்தால் நான் எனது போலிசார் விசாரணையிலும், எனது முதல் விசாரணையிலும் ஒரே மாதிரியாக கூறி சாட்சியம் அளித்திருப்பேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை: இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**